**செய்தி வெளியீடு எண்:781** **நாள்: 16.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் ''தேசிய பத்திரிகையாளர் தின'' வாழ்த்துச் செய்தி**

ஜனநாயகத்தின் நான்காவது தூண் என்று போற்றப்படும் பத்திரிகைத் துறை, செய்திகளை உள்ளது உள்ளபடி நடுநிலையோடு மக்களுக்கு தெரிவிப்பதோடு, அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சென்று மக்களுக்கும் அரசிற்கும் பாலமாக திகழ்ந்து வருகிறது.

இத்தகைய பெருமைமிக்க பத்திரிகை துறையின் விழிகளாகவும் செவிகளாகவும் திகழும் பத்திரிகையாளர்களின் பணியினை கௌரவிக்கும் இந்த தேசிய பத்திரிகையாளர் தின நன்னாளில், அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நாளில், ஜனநாயகத்தை கட்டிக் காப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் பத்திரிகையாளர்களின் நலனிற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம், குடும்ப ஓய்வூதியம், மருத்துவ உதவி போன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமுதாயத்தின் நலனிற்காக செய்திகளை மக்களுக்கு அளிக்கும் பத்திரிகையாளர் நண்பர்களை இத்தருணத்தில் பாராட்டி, அனைத்து பத்திரிகையாளர்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது தேசிய பத்திரிகையாளர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 16.11.2017**